பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 20 வியாழக்கிழமை 04.07.2024 கதிர் 239

# ரணிலின் பதவிக் காலஅளவு? விளக்கம்கேட்டு நீதிமன்றில் மனு

## தீர்ப்பு கிட்டும்வரை தேர்தலுக்கு தடையும் விதிக்கவும் கோரிக்கை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதவி காலம் குறித்து அரசமைப்பின் பிரகாரம் விளக்கமளிக்குமாறு கோரி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரபல வர்த்தகரான சி.டி லெவனவினால் மேற்படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

19ஆவது திருத்தத்தில் ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள 30.2 அரசமைப்பின் 82.6ஆம் சரத்து உரிய வகையில் திருத்ததிற்கு உள்ளாகவில்லை என்றும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 82ஆம் சரத்தில் ஜனாதிபதி பதவிக்காலம் ☞2

## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன் மற்றும் சாணக்கியன் ஆகியோரைத் தனது ஒய்வு இல்லம் ஒன்றில் சந்தித்துப் பேசியுள்ளார். இதற்கு முன்னர் செவ்வாய்க் கிழமையும் அவர் இவர்கள் இருவரையும் நாடாளுமன்ற வளாகத்திலும் சந்தித்துப்பேசியுள்ளார்.

சம்பந்தனுக்குஅஞ்சலிசெலுத்தும் வகையில் குறைந்தது அடுத்த ஒக்டோபர் மாதத்திற்குள்ளாவது தீர்வை முன்வைக்குமாறு நாடாளுமன்றத்தில்சுமந்திரன்விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து இந்தச் சந்திப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

இவற்றில் தீர்வுக்கான தொடக்க நடவடிக்கைகள் எவற்றைச் செய்யலாம்என்பதுபற்றிஆராயப்பட்டுளள்ளதாகக் கூறப்படுகின்றது. அதேபோன்று நேற்றைய சந்திப்பில், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டாலும் அரசமைப்பில் கூறப்பட்டுள்ளபடி தேர்தல் உரிய நேரத்தில் ☞2

## ஜப்பான் பாராட்டு

பொருளாதார நெருக்கடியை உரியவாறு கையாள்வதிலும், கடன்மறுசீரமைப்புசெயன்முறையைப் பூர்த்திசெய்வதிலும் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளை ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யொகோ கமிகவா பாராட்டியுள்ளார்.

ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யொகோ கமிகவாவின் அழைப்பின்பேரில் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி கடந்த திங்கட்கிழமை ஜப்பான் சென்றுள்ளார்.

ஜப்பானிய அமைச்சர் யொகோ கமிகவாவுடனான இருதரப்பு சந்திப்பு செவ்வாய்கிழமை டோக்கியோவில் நடைபெற்றது. இச்சந்திப்பின் போது பொருளாதாரநெருக்கடியைஉரியவாறு கையாள்வதிலும், கடன்மறுசீரமைப்பு செயன்முறையைப்பூர்த்திசெய்வதிலும் இலங்கையினால் அண்மையில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் தனது பாராட்டை வெளிப்படுத்தியுள்ளார். ☞2

## தேர்தல்கள் ஆணைக்குழு அடிபணிந்துவிடக் கூடாது

### சஜித் வலியுறுத்து

தேர்தல்களை ஒத்திவைக்கும்எந்தவகையிலான அழுத்தங்களுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு அடிபணியக்கூ-டாது என்று எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மட்டக்களப்பில்நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கருத்துத்தெரிவித்தபோது இதனைத் தெரிவித்தார்.

அரசமைப்பில்உள்ள மக்களின் வாக்குரிமை பாதுகாக்கப்பட வேண்டும். நாட்டு மக்களுக்கு ஜனாதிபதியைத் ☞2

## ஜனாதிபதித் தேர்தலை தாமதப்படுத்தும் முயற்சிகள் உடன் நிறுத்தப்படவேண்டும்

### சரத்பொன்சேகா வலியுறுத்து

ஜனாதிபதித் தேர்தலைத் தாமதிப்ப தற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகள் உடன் நிறுத்தப்பட வேண்டும்என்று முன்னாள் இராணுவத் தளபதியும் ஐக்கிய மக்கள் சக்தி யின் நாடாளுமன்ற உறுப் பினருமான பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது.

ஜனாதிபதியின் பதவிக் காலம்தொடர்பில்அரசமைப் பின் அடிப்படையில் விளக்கமளிக்கவேண்டும் என கோரும் மனு வொன்றை வர்த்தகர்ஒருவர்உயர்நீதிமன்றத்தில்தாக்கல்செய்துள்ளார்.

ஜனாதிபதியின்பதவிக்காலம் குறித்து நீதிமன்றம் தெளிவுபடுத்தவேண்டும் என தனது மனுவில் வேண்டுகோள் விடுத்துள்ள அவர், நீதிமன்றம் இந்த விளக்கத்தைவழங்கும்வரை எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைப்பதற்கு இடைக்கால உத்தரவை பிறப்பிக்கவேண்டும் ☞2

## பாதுகாப்பு, கூட்டுறவை மேம்படுத்த இலங்கை சுங்கத்துக்குச் சீன உதவி

### வழங்கத் தயார் என அறிவிப்பு

பாதுகாப்பு மற்றும் கூட்டுறவை மேம்படுத்துவதற்காக இலங்கை சுங்கத் திணைக்களத்துடன் ஒத்துழைப்புக்களைவழங்குவதற்கு சீனா தயாராக இருப்பதாகத்தெரிவித்துள்ளது.

சீனநாட்டுசுங்கத்தின் பொது நிர்வாகத்தின் துணை அமைச்சர் வாங் லிங்ஜுன், சீன ஆளும்தரப்பின் இந்த முயற்சிகளை செயற்படுத்துவதற்கான மூன்று கட்டங்கள் கொண்ட திட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கைக்கு வந்துள்ள செய்துள்ள லிங் ஜுன், அவரது பிரதிநிதிகள் மற்றும் சுங்கத் திணைக்கள அதிகாரிகளுக்கு இடையில் நேற்றுக்காலை நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

சீன ா ☞2

## பெருந்தலைவர் சம்பந்தனுக்கு இன்று குடாநாட்டில் அஞ்சலி

இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் பெரும் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனின் பூதவுடல் இன்று காலை 10 மணி முதல் யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

இதற்காகஅன்னாரது பூதவுடல்விமானம்மூலம் கொழும்பில் இருந்து கொண்டுவரப்படவுள்ளது. இன்று மலையே விமானம்மூலம்மீண்டும் திருகோணமலைக்கு அவரதுபூதவுடல்எடுத்துச் செல்லப்படும்.

இதேவேளை, வடக்கு,கிழக்கு தமிழ் மக்களின் ஏகோபித்த அரசியல் தலைவரால் அடையாளம் காட்டப்பட்ட ☞2

## பாடசாலைக் கல்வியை சீர்குலைக்க எவருக்கும் இடமளிக்கப்படமாட்டாது

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிரடி

முற்பகல் 7.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாடசாலைக் கல்வியை சீர்குலைக்க எவருக்கும் இடமளிக்கப்படமாட்டாது என்று கூறிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பில் தேவையான மேலதிக நடவடிக்கைகளை ஆராயுமாறு சட்டமா அதிபருக்கு தான் பணிப்புரை விடுத்துள்ளதாகவும் குறிப் பிட்டார்.

கல்விநிர்வாகசேவை உத்தியோகத்தர்களுக்கான நியமனங்கள் மற்றும் பட்டயதாரிகளுக்கான (டிப்ளோமா) ஆசிரியர் நியமனங்கள் வழங்கும் நிகழ்வு ☞2

## சம்பந்தனின் இறுதிக்கிரியை ஜூலை 7 திருமலையில்

இலங்கைத் தமிழரசுக்கட்சியின்சிரேஷ்ட தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமானஇராஜவரோதயம் சம்பந்தனின் இறுதிக் கிரியைகள் ஜூலை 7 ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை இந்து மயானத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தனின் பூதவுடல் நேற்று முன்தினம் காலை முதல் நேற்று மதியம் வரை பொரளைஏ.எப்.ரேமன்ட் மலர்ச்சாலையில் ☞2

## தோட்டக் குடியிருப்பில் தீ இருவர் அநியாயச் சாவு

கேகாலை - யட்டியாந்தோட்டை, பனாவத்தை தோட்டம் இரண்டாம்பிரிவிலுள்ள தோட்டக் குடியிருப்பில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் பரவிய தீயில் சிக்கி இருவர் உயிரிழந்துள்ளனர்.

சம்பவத்தில் 60 வயதானகணவனும்50 வயதானமனைவியுமே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

குறித்த லயன் குடியிருப் பிலுள்ள 3 வீடுகள் முழுமையாக தீக்கிரையாகியுள் ☞2

## தேசிய ஆளும் தரப்பு குறித்த பேச்சு அரசியல் சிக்கல்களை உருவாக்கும்

### ரோஹித்த அபயகுணவர்த்தன எம்.பி. தெரிவிப்பு

தேசியஆளும்தரப்பு குறித்த பேச்சு அரசியல் ரீதியாகபிரச்சினைகளை உருவாக்கும் என்று பொதுஜனபெரமுனவின் தேசியஇணைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரோஹித்த அபயகுணவர்த்தன தெரிவித்தார்.

கட்சியின் தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது: ☞2

## இனி இது .....

தன்னால் நடத்தப்படும் என்று ஜனாதிபதி தெளிவுபடுத்தினார் என்றும் அறியமுடிந்தது.

மாகாண சபைத் தேர்தல், மாகாண சபைச் சட்டங்களை முழுமையாகநடைமுறைப்படுத்தல், மத்தியால் திரும்பப் பெறப்பட்ட மாகாணசபையின்அதிகாரங்களை மீளளித்தல், குறைந்தபட்சம் பொலிஸ் அதிகாரங்கள் இன்றி ஏனைய அதிகாரங்களையாவது முழுமையாகச்செயற்படுத்தத்தக்க வகையில் செயற்படுதல் போன்ற விடயங்கள் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டிருக்கின்றன.

சுமந்திரன், சாணக்கியன் தெரிவித்த விடயங்களை மண்டையை மண்டையை ஆட்டி ஆட்டிரணில் அமைதியாகக் கேட்டு ஆழமாக உள்வாங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.

மீனுக்குத்தலையும் பாம்புக்கு வாலும்காட்டுவதில்வல்லவர்ரணில். அதேபோன்றுதனது தேவைக்காக யாரை வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் பயன்படுத்திவிட்டுத் தூக்கிப் போட்டுவிடும் பழக்கமும் கொண்டவர். எனவே இந்த விடயத்தில் அவர் என்ன செய்வார்? உண்மையில் ஏதாவது செய்வாரா? என்கிற விடயங்களைத் தெரிந்துகொள்ள இன்னும் ஒரு ஒன்றரைமாதங்கள்காத்திருந்தாலே போதுமானது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து அரசமைப்பில் மேற்கொள்ளப்படும் திருத்தம் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. 30.2ஆவது சரத்தினை திருத்தும்போது அரசமைப்பின் 82.6 சரத்து உரிய முறையில் பின்பற்றப்படாமையினால்மக்களின் இறையாண்மை அதிகாரம் மீறப்பட்டுள்ளதுடன் அரசமைப்பும் மீறப்பட்டுள்ளதாக அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் அரசமைப்பினை பாதுகாக்கும் அதிகாரம் உயர் நீதிமன்றத்துக்கு உள்ளதோடு, உயர் நீதிமன்றத்தின் ஊடாகவே சட்டமியற்றுபவர்கள் தான்தோன்றித்தனமாக அரசமைப்பை திருத்துவதற்கான வழிகாட்டல்கள் கிடைகின்றன என்றும் அம்மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்த மனு தொடர்பில் உயர் நீதிமன்றம் விளக்கமளிக்கும் வரை, ஜனாதிபதித்தேர்தலைநடத்துவதற்கு இடைகால தடை உத்தரவை பிறப்பிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக உயர் நீதிமன்றத்தின் இடைக்கால தடை உத்தரவானது ஜனாதிபதி தேர்தலை ஆறு வருடங்களாக கருத்திற்கொண்டு தேர்தல்கள் ஆணைக்குழுவின்தலைவர்மற்றும் பணிப்பாளர்நாயகம்ஆகியவர்களின் செயற்பாடுகளுக்குஉத்தரவிடுவதாக அமைய வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

## தேர்தல்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பத்தினைவழங்கவேண்டும். ஆனால் அரண்மனைகளுக்குள் இருந்துஜனாதிபதிதேர்தலைநடத்தாது இருப்பதற்கான சதித்திட்டங்கள் தயார்ப்படுத்தப்படுகின்றன.

இத்தகைய சூழலில் ஜனநாயகத்தை மறுதலிக்கும்எந்தவொரு செயற்பாடுகளுக்கும் இணங்கிச் செயற்பட வேண்டாம் என்று பொறுப்புள்ள அனைத்து அதிகாரிகளுக்கும் விநியமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

எந்தவொரு தரப்பினருக்கும் அடிபணியாது, சுதந்திரமான ஜனநாயக ரீதியிலான தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடத்தில் கேட்டுக் கொள்கின்றேன் என்றார்.

## தேசிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய ஆளும்தரப்புக்கு ஆதரவளித்துக் கொண்டு சஜித் பிரேமதாசவின் பக்கத்திலிருந்து சிலர் வருகை தரவுள்ளனர் என்று கூறப்படுகின்றது. இன்னும் சிலர் தேசிய ஆளும் தரப்புக்கு ஆதரவாக உள்ளனர். அவர்களை இணைத்துக்கொண்டு தேசிய ஆளும் தரப்பை அமைத்தால் நல்லது.

தேர்தலை அண்மையில் வைத்துக்கொண்டு தேசிய ஆளும் தரப்பு தொடர்பில் பேச்சுக்களை முன்னெடுப்பது நாட்டில் விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது. அமைச்சுப் பதவிகளை வழங்கி ஒவ்வொருவரையும் அழைக்கின்றார்கள் என்றே கருதப்படும். விமர்சனங்களும்வெளியிடப்படும்.

ஆகவே தற்போதைய தருணத்தில் தேசிய ஆளும்தரப்பு பற்றியஉரையாடல்அரசியல்ரீதியாக தேவையில்லாதபிரச்சினைகளையே உருவாக்கும் என்றார்.

## தோட்டக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளதோடு தீ விபத்திற்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யட்டியாந்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஜப்பான்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது மாத்திரமன்றி இருநாடுகளுக்கும் இடையிலான இருதரப்புத்தொடர்புகளை மேலும் விரிவுபடுத்துவது குறித்துக் கலந்துரையாடப்பட்டதுடன், மனிதவளப் பரிமாற்றத்தை வலுப்படுத்துதல் உள்ளடங்கலாக பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு ஏதுவான வாய்ப்புக்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.

அத்தோடு உத்தியோகபூர்வ கடன்வழங்குனர் குழுவின் உப தலைமை நாடு என்ற ரீதியில் இருதரப்பு கடன்மறுசீரமைப்பு செயன்முறைக்கு ஜப்பானால் வழங்கப்பட்டஒத்துழைப்புக்களுக்கு அமைச்சர் அலி சப்ரி நன்றி தெரிவித்துள்ளார்.

இடைநிறுத்தப்பட்டுள்ள ஜப்பானிய நிதியுதவியின் கீழான செயற்திட்டங்களைமீளஆரம்பிப்பது குறித்தும், இலங்கையில்ஜப்பானிய முதலீடுகளை ஊக்குவிப்பது குறித்தும் இச்சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டதாகஅமைச்சர் அலிசப்ரி அவரது உத்தியோகபூர்வ 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அதேவேளை சிரேஷ்ட அமைச்சரவை செயலாளர் ஹயாஷி யொஷிமஸாவுடனான சந்திப்பொன்றும்நடைபெற்றதுடன், இதன்போது இருநாடுகளுக்கு இடையில் நிலவும் நட்புறவு குறித்தும், அதனை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

## பாடசாலைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுஅலரிமாளிகையில்ஜனாதிபதி தலைமையில்நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித் ததாவது:

நிர்வாக சேவை மற்றும் ஆசிரியர் சேவையில் நுழையும் உங்கள் அனைவரையும் நான் வாழ்த்து கிறேன். இன்று நீங்கள் ஒரு முக்கியமான பொறுப்பை ஏற்கிறீர்கள். கடந்த இரண்டு வருடங்களில் நாடு வங்குரோத்தடைந்த போதும், அந்த வங்குரோத்து நிலையில் இருந்து வெளிவர நடவடிக்கை எடுத்த போதும் கல்விக்கான ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டது. வெற்றிடங்களுக்காக மாத்திரமன்றி மேலதிகமாகவும் ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்தோம். இக்கட்டான காலங்களிலும்நாட்டின் எதிர்காலத்தை மையமாக வைத்து இவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

நம்எதிர்காலம்நம் குழந்தைகள் தான். அதனால்தான், மாறிவரும் உலகில் புதிய அறிவு மற்றும் நவீன தொழில்நுட்ப அறிவுடன் எதிர்கால சந்ததியினரைப் பலப்படுத்த அரசு செயல்பட்டு வருகிறது. அது நம் அனைவரின் பொறுப்பாகும்.

எனவே, கௌரவமான தொழிலில் ஈடுபடும் அனைவரும் எதிர்கால சந்ததியினருக்காக தங்கள் சேவையைஅர்ப்பணிக்கவேண்டும். ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் செயற்பட வேண்டும். ஒழுக்கம் இல்லாமல் ஒரு நாட்டில் கல்வியைப் பேண முடியாது. உங்கள் வகுப்பறையில் 40-50 மாணவர்கள் இருக்கலாம்.

ஆனால் ஆசிரியருக்கும் இராணுவஅதிகாரிக்கும்வித்தியாசம் உண்டு. இராணுவ அதிகாரிகளின் கீழ் பயிற்சி பெற்ற மூத்தவர்கள் உள்ளனர். ஆனால் உங்களிடம் 18 வயதுக்குட்பட்டநபர்களேஉள்ளனர். இதில் கவனம் செலுத்தி செயற்பட வேண்டும். நாட்டின் கல்வியைப் பாதுகாக்காது, கல்வி முறையை சீர்குலைத்தால், நம் எதிர்கால சந்ததியை இழக்க நேரிடும்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப, நாம் வேகமாக முன்னேறவேண்டும். 85பில்லியன் டொலர்களாக இருந்த நமது மொத்த உள்நாட்டு உற்பத்தியை அடுத்த 20 - 25 ஆண்டுகளில் குறைந்தபட்சம் 350 பில்லியன் டொலர்களாக உயர்த்த முயற்சிக்க வேண்டும். இது நமது எதிர்கால சந்ததியினருக்காக செய்யப்பட வேண்டும்.

அதற்கிணங்க குழந்தைகளின் எதிர்காலத்தில் கவனம் செலுத்தி அதற்கு முன்னுரிமை கொடுப்பது நம் அனைவரின் பொறுப்பாகும். ஆசிரிய சேவை என்பது மற்ற சேவைகளில் இருந்து வேறுபட்ட சேவை என்றே சொல்ல வேண்டும். அந்த கண்ணியத்தைப் பாதுகாக்க வேண்டும்.

தற்பொழுது பாடசாலைகளின் ஒழுக்கத்தைப்பாதுகாக்கவேண்டும். பாடசாலைகளில் நடக்கும் இந்த வேலை நிறுத்தங்கள் நல்லதல்ல. அப்படிவேலைநிறுத்தம்செய்வதற்கு எந்தகாரணமும்இல்லை. 2022ஆம் ஆண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் ஆசிரியர்களுக்கானசம்பளஅதிகரிப்பு மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆண்டு அனைத்து அரசு ஊழியர்களுக்கும் பத்தாயிரம் ரூபா கொடுப்பனவொன்றை வழங்கினோம். நாட்டின் பொருளாதார சூழ்நிலையில், அதற்கு மேல் வழங்க முடியாது. அதன்பிறகு, சிலதொழிற்சங்கங்கள் இதை மறுபரிசீலனை செய்து கூடுதலாகவழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளன. ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு கோருவது எனக்கு ஆச்சரியமாக உள்ளது. அவர்களுக்கு இரண்டு சம்பள உயர்வு வழங்கினோம்.

அண்மையில் ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். அவர்கள் வகுப்பறைக்கு வரவில்லை. கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். பல்கலைக்கழக மாணவர்களும் ஏனையமக்களும்வந்து, கூச்சலிட்டு, ஜனாதிபதி அலுவலகத்திற்கு வர முயற்சி செய்தனர். வீதித் தடைகளை தள்ளி, கண்ணீர் புகைக்குண்டுக்கு மத்தியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இது ஒரு புதிய நிகழ்வு அல்ல. ஆனால் கௌரவமான தொழிலுக்கு அது பொருந்தாது.

அன்று, ஆசிரியர்கள் வேலைநிறுத்தம்செய்தபோது, வரவுப் பதிவுகளில் கையெழுத்திடாமல் பிள்ளைகளுக்கு பாடம் நடத்தினார்கள். சில நாடுகளில் கருப்பு பட்டியுடன் கற்பிக்கின்றனர். ஆனால் அண்மையில் நடத்தப்பட்ட வேலை நிறுத்தம் முற்றிலும் மாறுபட்டது.

தமிழ், முஸ்லிம்பாடசாலைகளில் இந்நிலை காணப்படவில்லை. பிள்ளைகளுக்கான கல்வி நடவடிக்கைகளை நடத்தினர். அத்துடன் சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் உரிய முறையில் பேணப்பட்டது.

ஆனால் அனைத்து சிங்கள மொழிமூலப் பாடசாலைகளிலும் கல்வி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. சாதாரண கிராமங்களைச் சேர்ந்த ஏழைப் பிள்ளைகள் இந்தப் பாடசாலைகளுக்கே செல்கின்றனர். இதுவா ஆசிரியர் பணியின் பொறுப்பு? என்று கேள்வி எழுப்ப விரும்புகிறேன். தமிழ், முஸ்லிம் பாடசாலைகளின் ஆசிரியர்கள் கல்வியின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டுள்ளனர். நுவரெலியா போன்ற பிரதேசங்களில் சிங்கள மொழி மூலப் பாடசாலைகள் நடைபெறாத போது தமிழ் மொழிப் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் தொடர்ந்தன. இவ்வாறான நிலை நாட்டில் ஏற்படக் கூடாது.

சில பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு பாடசாலைக்கு வரக்கூடாது எனமிரட்டல்விடுத்தனர். அரசாங்கம் எதுவும் செய்யவில்லை என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். அதேபோன்று அவர்களுக்கு ஆதரவாக செயற்படுகின்றார்கள் என்று எதிர்க்கட்சிகள் மீது குற்றம் சாட்டுகின்றனர். இது ஒரு நல்ல நிலைமை இல்லை.

முற்பகல் 7.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை யாரும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாடசாலைக் கல்வியைசீர்குலைக்கமுடியாது. இது தொடர்பான பரிந்துரையொன்றை வழங்குமாறுநான்சட்டமாஅதிபரிடம் தெரிவித்தேன். பாடசாலையை மூடுவதன் மூலமோ, வேலை நிறுத்தம் செய்வதன் மூலமோ பிள்ளைகளின் கல்வியை யாரும் சீர்குலைக்க முடியாது. எதிர்கால சந்ததியினருக்காக நாம் அந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும்

ஆசிரியர்இடமாற்றல்முறையை கணினி மூலம் செய்யலாமா என்பது குறித்து அமைச்சரிடம் நேற்று கலந்துரையாடினேன். பதவி உயர்வு அல்லது ஆசிரியர்கள் தொடர்பில்யாருக்கும்அநீதிஇழைக்க அனுமதிக்க முடியாது.

அதேபோன்று, இதற்குப்பின்னர் இவ்விடயம்தொடர்பில்கடுமையாக செயல்பட வேண்டியேற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிலருக்கு என் மீது கோபம் ஏற்படலாம். ஆனால் அதுதான் யதார்த்தம். நாம் நமது பிள்ளைகளுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்க அனைத்து நடவடிக்கைகளையும்மேற்கொள்ள வேண்டும்.

எனவே, பிள்ளைகளின் எதிர்காலத்தில் கவனம் செலுத்துமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். மேலும், இந்த நாசகாரசெயல்களுக்குதுணைபோக வேண்டாம் என எதிர்க்கட்சிகளிடம் முக்கியவேண்டுகோள்விடுக்கிறேன். ஏனெனில் மக்களினதும் பெற்றோர்களினதும் குரலுக்கு செவிசாய்த்து செயல்பட வேண்டும். இன்று ஆசிரியர் தொழிலில் பிரவேசித்த உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகள் என்றார்.

## ஜனாதிபதித் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

செப்டம்பர் 17 2024ம் ஆண்டிற்கும் ஒக்டோபர் 16ம் திகதிக்கும் இடையில் திட்டமிடப்பட்டுள்ள ஜனாதிபதி தேர்தலை தாமதப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் எந்த முயற்சியையும் உடனடியாக நிறுத்தவேண்டும்;.

இலங்கை மக்கள் பெருந் துன்ப துயரங்களை அனுபவிக்கின்றனர். சரியான தலைவர் ஒருவரை தெரிவு செய்வதற்கான அவர்களின் உரிமையை பறிப்பதே அவர்கள் இறுதியாக அனுபவிக்ககூடிய மோசமானவிடயம். ஜனநாயகத்தின் கொள்கைகளை அனைத்து சந்தர்ப்பத்திலும்பின்பற்றவேண்டும்.

அனைத்து இலங்கையர்களும் அனைத்து பேதங்களையும் கைவிட்டுவிட்டு இந்த அநீதிக்கு எதிராக அணி திரளவேண்டும் வாக்களிப்பதற்கான எங்கள் உரிமைக்காக போராட முன்வர வேண்டும் என்றார்.

## சம்பந்தனின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

அன்னாரது பூதவுடலுக்கு ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்வாதிகள், தூதரக அதிகாரிகள் உள்ளிட்ட பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.

சம்பந்தன்படித்தபாடசாலைகளில் ஒன்றான யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையினர் அன்னாரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

பூதவுடல் நேற்று 2.30 மணியிலிருந்து மாலை 4 மணி வரை நாடாளுமன்றில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, பிரதமர் தினேஷ் குணவர்த்தன உள்ளிட்டவர்கள்பேழையைஉரிய மரியாதைகளுடன் வருவித்து நாடாளுமன்ற வளாகத்தில் அஞ்சலியை ஆரம்பித்து வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து அரசியல்வாதிகள், இராஜதந்திரிகள் தமது அஞ்சலிகளை செலுத்தினர். இதன்போதுசிறுநினைவுரைகளும் ஆற்றப்பட்டன.

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்மார்ட் கஸ்டம்ஸ் திட்டத்தை செயற்படுத்துகிறது, இது உலகளவில்உள்ளசுங்கமுகவர்நிறுவனங்களுடன் ஒரே தளத்தின் மூலம் ஒத்துழைப்பதை உள்ளடக்கியது என்று லிங்ஜுன் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு சாதகமான விளைவுகளை வழங்குவதில் சீனாவின் அர்ப்பணிப்பை அவர் வெளிப்படுத்தியதோடு செயற்திறன், பரஸ்பர புரிதல் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்த ஒற்றை சாளர முறை மூலம்ஆதரவைவழங்குவதாகவும் கூறினார்.

இதேவேளை, இலங்கையில் சுங்கத்திட்டங்களுக்குஅனுசரணை வழங்க சீனாவின் விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளதோடு இந்த முயற்சிகள் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால உறவை மேலும் வலுப்படுத்தும்என்றுநிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## பெருந்தலைவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் பெருந்தலைவரும், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அமரர்இரா.சம்பந்தனின்புகழுடலை கிளிநொச்சியில்மக்கள்அஞ்சலிக்காக வைப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில்அவரதுபுகழுடன் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் கிளிநொச்சி மாவட்டப் பணிமனையான அறிவகத்தில் ஜூலை 4 அல்லது 5 தினங்களில் ஒன்றில்பொதுமக்கள் அஞ்சலிக்காக வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகநாடாளுமன்ற உறுப்பினர்சிறிதரனின்ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

இன்று யாழ்ப்பாணம் எடுத்துவரப்படும் பூதவுடல் முதலில் யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் உள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சித் தலைமையகத்தில் ஒன்றரை மணி நேரம் அரசியல் தலைவர்களின் அஞ்சலிக்காக வைக்கப்படும். அதன் பின்னர் தந்தை செல்வா சதுக்கத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு மாலை 4 மணி வரை அங்கு பொதுமக்கள் அஞ்சலிக்காகவைக்கப்படும்என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# அமைச்சர் டக்ளஸ் தலைமையில் பூநகரியில் கலந்துரையாடல்





கடற்றொழில்அமைச்சர்டக்ளஸ்தேவானந்தாதலைமையில் நேற்று (புதன்கிழமை) பிற்பகல் பூநகரி பிரதேச செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் குடமுருட்டி குளத்தின் கீழ் நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் பள்ளிக்குடா மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கடலரிப்பு மற்றும் இறங்கு துறை இன்மை போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

தொடர்ந்து ஊடகங்களுக்கு அமைச்சர் கருத்துதெரிவித்திருந் திருந்தார். இந்திய இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பாக பேசுவதற்கு இருதரப்பும் இணங்கியுள்ளதாக தெரிவித்திருந்தார்.113

## பச்சிலைப்பள்ளிப் பிரதேச பண்பாட்டு விழா நேற்று



பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகமும், பச்சிலைப்பள்ளி கலாசார பேரவையும் இணைந்து நடத்திய கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப் பள்ளி பிரதேச பண்பாட்டு விழா நேற்று (புதன்கிழமை) காலை 9.00 மணிக்கு சிறப்புற நடைபெற்றது.

வடக்குமாகாணபண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள்திணைக்களத்தின்அனுசரணையுடன் குறித்த நிகழ்வு நடைபெற்றது.

மேற்படி நிகழ்வு கிளி.பளைகளைத் தொடர்ந்து பண்பாடு, கலாசாரத்தை வெளிப்படுத்தும் கலைகளுடன் விருந்தினர்கள் விழா மண்டபம்வரைஅழைத்துவரப்பட்டனர்.

இந் நிகழ்வில் பல்வேறுபட்ட கலை கலாசார நிகழ்வுகள் நடைபெற்றதுடன், பிரதேசகலைஞர்கள் கலைத்தென்றல், இளங்கலைஞர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

மேலும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் மற்றும் கலாசாரப் பேரவையின்வெளியீடானபசுந்துளிர் இதழ் - 09 நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.



மத்திய கல்லூரியின் ஆருக்ஷ்கிருத்திக் கலையரங்கத்தில், பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலாளரும்பிரதேசகலாசாரப் பேரவைத் தலைவருமான இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர்(காணி) இ. நளாஜினியும், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் பணிப்பாளர் லாகினி நிருபராஜும் கலந்து சிறப்பித்தனர்.

மேலும், கௌரவ விருந்தினர்களாக கிளி.பளை மத்திய கல்லூரியின் அதிபர் கு.ரவீந்திரா மற்றும் தம்பகாமம் பிரதேச அண்ணாவியார் கலாபூஷணம் கந்தையா ஆறுமுகம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போதுபளைஇரட்டைக்கேணி அம்மன் ஆலய விசேட பூசைவழிபாடு

மேலும், தேசிய கலை இலக்கிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நடைபெற்றது.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செயலக பிரதம கணக்காளர் சி.கஜேந்திரன், கிளிநொச்சி மாவட்ட பதில் சமுர்த்தி பணிப்பாளர் ஆர். கேதீஸ்வரன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், இரட்டைக்கேணி அம்மன் ஆலய பிரதம குருகனகசபை, பங்குத்தந்தை அன்ரன் ஜோர்ச் அடிகளார், பிரதேச பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, நிதி அனுசரணையாளர்கள், கலைஞர்கள், பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், பிரதேச மட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மாணவர்கள்எனபல்வேறுதரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர். (113)

## புத்தளம் செய்னப் பாடசாலை மாணவர் தலைவர்களுக்கு சின்னம் அணிவித்தல்





(எம்.சியாஜ்)

புத்தளம் செய்னப் பெண்கள் ஆரம்ப பாடசாலையில் புதிதாக தெரிவு செய்யப்பட்ட மாணவர் தலைவர்களுக்கான சின்னம் அணிவித்தல் மற்றும் இலவச குடிநீர் திட்டம் அங்குரார்ப்பணம் என்பன செவ்வாய் பாடசாலையின் அதிபர் எச்.யூ.எம்.எஹியா தலைமையில் நடைபெற்றது.

இநிகழ்வில் புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலை பழைய மாணவர் அமைப்பான பல்ஸ்ட் அமைப்பை சேர்ந்த எஸ்.எம். முஹம்மத் மபாஸ் மற்றும் எம்.டீ. றினாஸ் முஹம்மத், பாடசாலை நிகழ்வுகளின் அறிவிப்பு துறைக்கு பங்களிப்பு நல்கி வரும் எம்.ஆர்.எம்.ஷவ்வாப், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் செயலாளர் முஹம்மது நளீம் உள்ளிட்ட பிரதி அதிபர்கள், நலன் விரும்பிகள், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

பல்ஸ்ட் அமைப்பினால் கடந்த ஆறு வருடங்களாக 'தேவைப்படுபவர்களுக்கான உணவு' எனும் செயற்திட்டம் மூலம் செய்னப் பெண்கள் ஆரம்ப பாடசாலையின் தேவையுடைய மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதற்கான செலவீனங்கள் முழுவதும் பல்ஸ்ட் அமைப்பை சேர்ந்த நண்பர்களால் இறை திருப்தியை நோக்காகக் கொண்டு வழங்கப்படும் நன்கொடைகளாகும்.

இவ்வருடத்துக்கானசிரேஷ்டமாணவதலைவியாக எம்.என்.அய்தா செய்ன் தெரிவு செய்யப்பட்டதோடு, 06 உப சிரேஷ்ட மாணவ தலைவர்களோடு மொத்தமாக 40 மாணவ தலைவர்கள் இதன் போது அதிபர் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொடண்டனர். இவர்களுக்கான பதக்கங்களும் அதிதிகளால் அணிவிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் சமகாலத்தில் பாடசாலையில் புதிதாக பொருத்தப்பட்டுள்ள இரு நீர் தாங்கிகளிலிருந்து நீர் விநியோக திட்டமும் அதிதிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

புத்தளம் நகரில் சமூக சேவையாற்றிய காலஞ்சென்ற கிராம உத்தியோகத்தர் ஹசன் அவர்களது உறவினர்களால் ஒரு நீர் தாங்கியும், மாணவர் தலைவர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் பெற்றோர்களினால் மற்றுமோரு நீர் தாங்கியும் பாடசாலைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# தேர்தலை பிற்போடும் மற்றொரு நகர்வு

அரசுத் தலைவர் தேர்தலைப் பிற்போடத்தக்க வகையில் உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்போது பதவியில் உள்ள அரசுத் தலைவரின் பதவிக் காலம் எவ்வளவு என்பதை உயர் நீதிமன்றம் தெளிவுபடுத்த வேண்டும் என்று அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது. அதாவது அரசுத் தலைவரின் பதவிக் காலம் அரசமைப்புப்படி 5 வருடங்களா, 6 வருடங்களாக என்பதைத் தீர்மானிப்பதே வழக்கின் நோக்கம் என்று சுட்டிக்காட்டப்பட்டாலும், இந்த வழக்கின் தீர்ப்பு வரும் வரைக்கும் அரசுத் தலைவர் தேர்தல் நடத்தப்படக்கூடாது என்று இடைக்காலத் தடை உத்தரவு விதிக்கப்படவேண்டும் என்றும் வழக்காளி தனக்கான நிவாரணத்தைக் கோரியிருக்கிறார்.

அரசுத் தலைவர் தேர்தல் அடுத்த வைகாசி மாதத்திற்குள் நடக்குமா என்கிற சந்தேகத்தை மீண்டும் நாடுமுழுவதும் கிளறிவிட்டுள்ள இந்த வழக்கை விசாரிக்க 5 நீதியரசர்கள் கொண்ட அமர்வு ஒன்றை தலைமை நீதியரசர் நியமித்துள்ளார். விரைவில் விசாரணைகள் தொடங்கும். அரசுத்தலைவர்தேர்தலுக்கானபணிகளைத் தொடங்கும் நேரத்தில் இத்தகைய சட்டத் தடை ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் சிலர் இறங்கியிருப்பது, ரணில் தனது பதவியைத் தக்கவைப்பதற்காக மேற்கொள்ளப்படும் தந்திரம் என்கிற விமர்சனங்கள் உண்டு. ஆனால், தான் அவ்வாறு செய்யப்போவதில்லை, 5 வருடங்களில் தேர்தலை உரியபடி நடத்துவேன் என்று ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்திருக்கிறார் என்றும் தெரிகிறது. இது தொடர்பில் தனது அலுவலக சட்டப்பிரிவினர் ஓர் விரிவான அறிக்கையை வெளியிடுவார்கள் என்றும் தெரிவித்திருக்கிறாராம்.

ஏற்கனவே, மக்கள் கருத்துக் கணிப்பு ஒன்றின் மூலம் நாடாளுமன்றத்தின் ஆயுட் காலத்தையும் அரசுத் தலைவரின் பதவிக் காலத்தையும் நீடிக்கவேண்டும் என்று அரசுத் தலைவரின் சொந்தக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்த கருத்துக்கு நாடு முழுவதும் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. தேர்தல் உரிய நேரத்தில் நடத்தப்பட்டு மக்களின் இறைமை காக்கப்படவேண்டும் என்றும் அனைவராலும் வலியுறுத்தப்பட்டது. இதனால் அந்த முயற்சி முளையிலேயே பிசுபிசுத்துப்போனது. இதனாலேயே சட்டத்தின் ஊடாக அரசுத் தலைவர் பதவிக் காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதோ என்கிற சந்தேகம் மக்களிடம் ஏற்படுகின்றது.

தனக்கும் அந்த முயற்சிகளுக்கும் தொடர்பில்லை என்று அரசுத் தலைவர் சொல்லியிருக்கிறார் என்றாலும் அவர் உண்மையை மட்டுமே பேசுகின்ற ஒரு நல்ல மனிதர் என்று நம்பக்கூடியவரல்லர் என்பதால், இந்த முயற்சிகளின் பின்னணி சந்தேகத்திற்குரியதே.

6 வருடங்களாக இருந்த அரசுத் தலைவரின் பதவிக் காலத்தை 5 வருடங்களாகக் குறைப்பது என்று முடிவெடுத்து, விவாதம் நடத்தி அதனடிப்படையில் திருத்தங்கள் செய்யப்பட்டன. 2015 ஆட்சிக்கு வந்த ரணில் –மைத்திரி கூட்டால் இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் கோட்டாபய ராஜபக்ச ஆட்சிக்கு வந்து அந்தத் திருத்தங்களை நீக்கும் வகையில் மற்றொரு திருத்தத்தைக் கொண்டு வந்தபோதுகூட இந்தப் பதவிக் காலம் மாற்றப்படவில்லை. அப்படியிருந்தும் திருத்தத்தங்களின்போது அரசமைப்பின் ஓரிடத்தில் அதனைச் சரியாகத் திருத்தவில்லை என்கிற சட்ட ஓட்டையைப் பயன்படுத்தியே தற்போது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது ஒட்டுமொத்த மக்களின் விருப்புக்கும் ஆணைக்கும் எதிரானது.

இருந்தாலும் இனி நீதிமன்றத்தின் முடிவு கிடைக்கும் வரை காத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை.

# மருத்துவர்கள் பற்றாக்குறையால் தவிக்கும் இலங்கை

**சரோஜ் பதிரானா**

சுகாதாரத் துறையிலிருக்கும் முதுநிலை அதிகாரிகள் அளித்த பணி நெருக்கடிகள் மோசமாக இருந்ததன. அதைவிட, கொவிட்-19 பெருந்தொற்று காலத்தில் கசக்கிப் பிழிந்து வேலைவாங்கிவிட்டு பிறகு நட்டாற்றில் விட்டுவிட்டனர் அரசை ஆள்பவர்கள்.



கொவிட் பெருந்தொற்றைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிதான், போதும் இனி இலங்கை வாசம் என்று லஹிரு பிரபோதா கமகே முடிவெடுக்க காரணமாக அமைந்தது.

கமகே (35) இலங்கையைச் சேர்ந்த மருத்துவர். இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து 2023 ஜனவரியில் பிரிட்டனில் பணிபுரியத் தொடங்கினார். இலங்கைத் தலைநகர் கொழும்பில் இருந்து 120 கி.மீ தொலைவிலுள்ள ஹட்டன் நகரில் மருத்துவராக, சுமார் ஆறு ஆண்டுகள் பணியாற்றினார். இப்போது பிரிட்டனின் தேசிய சுகாதார சேவையில் (என்ஹெச்எஸ்) முதுநிலை அதிகாரியாக இருக்கிறார்.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் விலைவாசிகள் உயர்ந்தன - 2022ஆம் ஆண்டு இறுதியில் பணவீக்க அளவு 73% ஆனது. இனி நாட்டைவிட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை உணர்ந்தார் கமகே. 'அது அவ்வளவு எளிதான முடிவாக இல்லை. ஆம், நாம் எனது நாட்டை மிகவும் நேசிக்கிறேன். அது என்றுமே மாறாது. நான் அங்கு எவ்வளவு பணம் சம்பாதித்தேன் என்பது முக்கியமல்ல, அதேசமயம் படிப்புக்காகவும் வாழ்க்கைச் செலவுகளுக்காகவும் வாங்கிய கடன்களை திருப்பிச் செலுத்த வேண்டிய கடமையும் இருந்தது' என்கிறார்.

இது ஒருவரோடு முடிவுபெறும் விஷயம் அல்ல. இலங்கையின் மிகப் பெரிய அரசு மருத்துவர்கள் தொழிற்சங்கமான 'அரசு மருத்துல அதிகாரிகள் சங்க'த்தின் சொற்படி, கடந்த இரண்டு ஆண்டுகளின் சுமார் 1,700 மருத்துவர்கள் இலங்கையிலிருந்து வெளியேறி இருக்கிறார்கள், அதற்குப் பொருளாதார காரணங்களே பிரதானம் என்கிறது அச்சங்கம். வெளியேறியவர்கள் எண்ணிக்கை மொத்த மருத்துவர்களில் 10%.

இலங்கையின் சுகாதார அமைப்பு ஏற்கெனவே வலுவிழந்திருப்பது கண்கூடாகத் தெரிகிறது. கொழும்புக்கு தெற்கில் 200 கிலோமீட்டர் தொலைவில் உள்ள எம்பிலிப்பிட்டிய மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையின் 2 மயக்கவியல் மருத்துவர்கள் வேலையை விட்டு வெளியேறிவிட்டதால் அவசர அறுவை சிகிச்சைகளைக்கூட நிறுத்தவேண்டி உள்ளது. இடைக்கால ஏற்பாடாக அருகில் உள்ள இன்னொரு அரசு மருத்துவமனையிலிருந்து மயக்கவியல் நிபுணர் இடம் மாற்றப்பட்டார். அவரோ மேல் படிப்பு பயிற்சிக்காக வெளிநாடு சென்றுவிட்டார்.

கொழும்பிலிருந்து வடகிழக்கில் 200 கி.மீ தொலைவில் உள்ள அனுராதாபுரம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருக்கும் குழந்தைகள் நலப் பிரிவில் பணிபுரிந்த மூன்று குழந்தைகள் நல மருத்துவர்கள் வெளிநாட்டு வேலைக்குச் சென்ற பிறகு, அந்தப் பிரிவையே தற்காலிகமாக மூடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மருத்துவர்களின் புலப்பெயர்வு காரணமாக, சுமார் 100 ஆதார மருத்துவமனைகள் மூடப்படும் நிலையில் இருக்கின்றன என்று சுகாதாரத் துறை அமைச்சர் ரமேஷ் பதிரானாவை எச்சரித்துள்ளது ஜிஎம்ஓஏ சங்கம். இவை அனைத்தையும் தவித்திருக்க முடியும் என்கின்றனர் மருத்துவர்கள்.

**பணமும் இல்லை மரியாதையும் இல்லை**

இலங்கையின் பண மதிப்பில் ரூ.64,000 காமகேஜின் அடிப்படை சம்பளம். ஏனைய கொடுப்பனவுகள், மேலதிக வேலைநேரக் கொடுப்பனவு என எல்லாவற்றையும் சேர்த்தால் ரூ.2,20,000.

'நான் கார் வைத்திருந்தேன், உணவு உறைவிடத்துக்கான செலவு, அதுபோக கடன் தொகை, பெற்றோருக்கானச் செலவு. இவை எல்லாவற்றுக்கும் பிறகு கையில் நிற்பது ரூ.20,000 மட்டும்தான், கேளிக்கைகளுக்காகச் சென்றால் அதுவும் மிஞ்சாது' என்கிறார் கமகே. பண நெருக்கடிகளுடன் அரசு அதிகாரிகள் மரியாதையின்றி நடத்தியதும் அவரை இந்த முடிவை எடுக்கச் செய்தது.

ஒரு சிறிய கிராமத்தில் இளநிலை மருத்துவராக பணிபுரிந்துகொண்டிருந்தபோது, தனது பணி நேரத்துக்குப் பின் சுகாதார முகாம்களை நடத்தியிருக்கிறார் கமகே. கோவிட் பெருந்தொற்று காலத்தில் பிற மருத்துவர்களுடன் இணைந்து நோயாளிகளை அடையாளம் காணும் செயலி ஒன்றையும் உருவாக்கினார். அன்றைய அரசுத் தலைவர் கோதபய ராஜபக்சே, இவரது முயற்சியைப் பாராட்டி ஊக்குவிப்பதற்குப் பதிலாக, அந்தப் பணியை ஒரு தனியார் நிறுவனத்துக்கு லாபம் வரும்படி ஒப்பந்த அடிப்படையில் மாற்றிக் கொடுத்துவிட்டார்.

'நாங்கள் எங்கள் செயலி குறித்து கொவிட்-19 தலைமைக் குழுக்கு விளக்கவுரை அளித்தோம். அவர்கள் கவனமாக கேட்டும் குறிப்பெடுத்தும் கொண்டனர். பின்னொரு நாள், தனியார் நிறுவனம் ஒன்றுதான் இந்தச் செயலியை- சில குறைகளுடன் – உருவாக்கியது என்பதைக் கேள்விப்பட நேர்ந்தது' என்கிறார் கமகே.

கொழும்பில் உள்ள தேசிய மருத்துவமனையின் இதய நிபுணர் எராண்டா ரணசிங்க ஆராய்ச்சி (35), இலங்கையைவிட்டு வெளியேறும் முடிவை எடுக்கத் தூண்டிய மூன்று காரணங்களைப் பட்டியலிடுகிறார். அவை, 'முதலாவதாக, அடிப்படையில் பொருளாதார காரணங்கள். இரண்டாவது, நல்ல பணிச் சூழல் தேவை. மூன்றாவது,நமக்கும் குழந்தைகளுக்கும் நல்ல எதிர்காலத்தைக் கட்டமைக்க வேண்டும்' என்கிறார்.

மருத்துவ சேவைக்கு சமூகத்தில் பெரியளவில் மரியாதை கிடைக்கவில்லை, குறிப்பாக பெருந்தொற்றுக்குப் பிறகு இதை உணர்ந்ததாகச் சொல்கிறார்.

'கொவிட் பெருந்தொற்றின்போது மிகவும் கஷ்டபட்டோம், ஆனால் எங்களால் சாத்தியப்பட்ட வரையில் பல உயிர்களைக் காப்பாற்றினோம். கோவிட் மிகத் தீவிரமாக பரவிக்கொண்டிருந்த வேளையில் அதிக பணிச்சுமை காரணமாக பல நாள்கள் வீட்டுக்கூட செல்லவில்லை, என் வயதான பெற்றோருக்கும் கிருமி தொற்றிவிடுமோ என்ற பயமும்கூட. அந்த நேரத்தில் இப்படிப் பல மருத்துவர்கள் இப்படித்தான் தவித்தனர்' என்கிறார் ரணசிங்க ஆராய்ச்சி.

பெருந்தொற்றுக்குப் பிறகு அதற்கு முன்பு இருந்திராதவகையில் நாடே பெருளாதார நெருக்கடியில் சிக்கிக்கொண்டது. உணவு, மருந்து, எரிபொருள் (பெட்ரோல், டீசல்) உள்பட பல அத்தியாவசியப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது, மக்கள்

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

## உலக உணவுத்திட்ட பிரதிநிதி கிளிநொச்சிக்கு வருகை





உலக உணவுத்திட்டத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி அப்துர்ரஹீம் சித்திக் கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

கிளிநொச்சி மாவட்ட பதில் செயலாளர் எஸ்.முரளீதரன் அவர்களை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடிருந்தார்.



தொடர்ந்து உலக உணவுத்திட்டத்தின் பாடசாலைகளுக்கு வழங்கும் உணவுகளுக்கு மரக்கறிகளை வழங்கும் பொருட்டு கனகாம்பிகைக் குளத்தில் உலக உணவுத் திட்டத்தால் வாழ்வாதார உதவிகள் வழங்கிய விவசாயின் தோட்டத்தை பார்வையிட்டு தோட்டத்தில் அறுவடையும் செய்தார். (05 - 113)

## மருத்துவர்கள் பற்றாக்குறையால் தவிக்கும் இலங்கை



நீண்ட நேர வரிசையில் நிற்க வேண்டியதாயிற்று. அதில் மருத்துவர்களும் விதிவிலக்கு அல்ல.

மருத்துவர்களுக்கு மட்டும் சிறப்பு எரிபொருள் ஒதுக்கீடு செய்திட ஜிஎம்ஓஏ மூலம் கோரிக்கை வைக்கப்பட்டது, அதற்குப் பொதுவெளியில் எதிர்ப்பு கிளம்பியது. 'நான் பல நாள்கள், பல மணி நேரம் வரிசையில் நின்றேன், நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்குக்கூட இத்தனை மணி நேரங்களை நான் செலவுசெய்ததில்லை - ஆனால் மக்கள் பலர் இதைக் கேட்கும் மனநிலையிலேயே இல்லை' என்றார் ரணசிங்க ஆராய்ச்சி.

### ஒரு நல்ல எதிர்காலம்

உயரும் பணவீக்கம், வெளிநாட்டுக் கடன் நிலுவை, எரிபொருள் தட்டுப்பாடு, மருந்து, உணவு ஆகியவற்றின் தட்டுப்பாடு காரணமாக நாடு முழுவதும் போராட்டங்கள் வெடித்தன. அந்தப் போராட்டத்தின் உச்சமாக 2022 ஜூலை மாதம் ராஜபக்சே வெளியேற்றப்பட்டார். நிதி நிர்வாக முறைகேடு காரணமாக நாட்டின் பொருளாதாரம் மொத்தமாக தடுமாறியது தொடர்பாக கோதபயாவும் அவரது சகோதரர்கள் மஹிந்தா ராஜபக்சேவும் பசில் ராஜபக்சேவும் 2023 நவம்பரில் உச்ச நீதிமன்றத்தில் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர். ஆனால், ரணசிங்க ஆராய்ச்சி, ஓய்வுபெற்ற பெற்றோருடன் அவரது உடன்பிறப்புகள் மூவராலும் அதுவரைக்கும் தாக்குப்பிடிக்க முடியவில்லை. அதனால், 2022 ஆகஸ்டு மாதம் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தார் ரணசிங்க.

'இலங்கையில் நான் நடுத்தர நிலை மருத்துவராக பணிபுரிந்தபோது, மாதம் 400 பவுண்டுகள் சம்பாதித்தேன். இதே தரத்தில் பிரிட்டன் போன்ற நாட்டில் உள்ள டாக்டர் 3,000 பவுண்டுகள் சம்பாதிப்பார்' என்கிறார் ரணசிங்க. மேலும், அந்த நேரத்தில் கழுத்தை நெரிக்கும் பணவீக்கம் ஏற்பட்டதால் இலங்கையில் ஆன செலவும் பிரிட்டனில் ஆகும் செலவும் ஒன்றுதான் என்கிறார்.

இதற்கிடையில், சில மாதங்களுக்கு முன்பே தனது கடனில் ஒரு பகுதியை அடைத்ததால், சற்றே சமாளித்தார். 'ரூ.15 லட்சம் கடன் தொகையை ஓர் ஆண்டுக்குள் அடைத்தேன். இலங்கையில் இருந்திருந்தால், அதை நினைத்துகூட பார்த்திருக்க முடியாது' என்கிறார் கமகே.

இதன் பின்விளைவுகளை நோயாளிகளும் மருத்துவமனைகளும் எதிர்கொண்டனர். ஜிஎம்ஓஏ - மருத்துவர்கள் தொழிற்சங்கம்- மருத்துவர்களை அவர்கள் இன்னல்களிலிருந்து மீட்க முயற்சி எடுக்க வேண்டி அரசிடம் பல கோரிக்கைகளை வைத்தனர்.

'மருத்துவர்கள் நினைப்பது என்ன, அவர்கள் சம்பளம் போதுமானதாக இல்லை. அவர்கள் பணியும் நாட்டுக்கு செய்யும் சேவையும் குறைத்து மதிப்பிடப்படுகிறது. இதுதான் மிக முக்கியமான பிரச்சினையாக நாங்கள் இனங்கண்டுள்ளோம்' என்கிறார் ஜிஎம்ஓஏ சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் ஹன்சமால் வீரசூர்யா.

மேலும், சரியான தொழில் வளர்ச்சி அமைப்பு இல்லாததும் நாட்டின் தொலைதூரங்களில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு ஊக்கத்தொகை அளிப்பதில் இருக்கும் பற்றாக்குறையும் அவர்களுக்கு ஏமாற்றத்தையே அளிக்கிறது என்கிறார்.

சமூகத்தில் ஆழமாக புரையோடியிருக்கும் சமூகப் பாகுபாடுகளும் சில மருத்துவர்களை பாதிக்கிறது. 'இலங்கையில், சில மருத்துவர்கள் ஒன்றாக உட்காரவோ அல்லது செவிலியர்களுடன் சேர்ந்து சாப்பிடவோ மாட்டார்கள், அங்கு, 'தான்' என்ற அகங்காரத்துடன் சமூகப் படிநிலை கட்டமைப்புகளும் உள்ளன. பிரிட்டனில் யாரும் முழுதாக அறியும் முன் இவர் இப்படித்தான் என்ற முடிவுக்கு வருவதில்லை. அப்படிப் பார்ப்பது மனங்களைக் காயப்படுத்திவிடும் என்கிறார் கமகே.

'இலங்கையின் சுகாதார கட்டமைப்பு முறை எனக்கு அலுத்துவிட்டது. பொருளாதார விஷயங்கள் போதுமான அளவுக்கு மேம்பட்டால்- பணவீக்கப் பிரச்சினை குறைந்தால் - சில மருத்துவர்கள் இலங்கைக்குத் திரும்ப தயாராக உள்ளனர். இந்தக் குறைந்த கால இடைவெளியில் பல நாடுகளுக்குப் பயணம் செய்தேன், ஆனால் இலங்கையைப் போல் வேறொரு நாட்டைப் பார்க்க முடியவில்லை. நாட்டின் நிலைமைகள் சீராகுமேயானால், எங்கள் பணி முறையாக அங்கீகரிக்கப்படுமானால், எங்களுக்கான உரிய சம்பளம் கொடுக்கப்படுமேயானால், மீண்டும் இலங்கைக்கு வருவதில் மிகவும் மகிழ்ச்சி அடைவேன்' என்கிறார் ரணசிங்க ஆராய்ச்சி.

இவை அனைத்தும் விரைவாக நடக்கும் என்பதற்கான சாத்தியப்பாட்டை ரணசிங்வால் பார்க்கமுடியவில்லை. இதனால் இப்போதைக்கு வடக்கு அயர்லாந்துதான் அவரது வீடு.

© அல்ஜஸீரா




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# வடமாகாண ஆளுநர் அலுவலகம்முன் சிவசேனை அமைப்பினர் போராட்டம்







யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளருக்கு எதிராக இலங்கை சிவசேனை சிவதொண்டர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுட்டனர்.

யாழ்ப்பாண கல்வி வலயத்தில் இருந்து அவரை வெளியேற்றுமாறு கோரிகவனவீர்ப்புப்போராட்டம்நேற்று (செவ்வாய்க்கிழமை) யாழ்ப்பாண வட மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக இடம்பெற்றது.



பல்வேறு வாசகங்கள் எழுதிய பாதாதைகள்ஏந்தியும் கோசமிட்டும் தமது எதிர்ப்புபோராட்டத்தை முன் னெடுத்தனர்.

இதில் இலங்கை சிவசேனை சிவ தொண்டர் தலைவர் மறவன் புலவு சச்சிதானந்தம், சிவ தொண்டர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். (05)

# அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் புதிய தலைவராக சட்டத்தரணி அம்ஹர் ஷரீப்

(ஐ. ஏ. காதிர் கான்)

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் 74 ஆவது வருட தேசிய மாநாடு, பேரவையின் தலைவர் இஹ்ஸான் ஏ. ஹமீத் தலைமையில், கொழும்புஇலங்கைமன்றக்கல்லூரியில்சனிக்கிழமை மாலை வெகு விமரிசையாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக, துருக்கி உயர்ஸ்தானிகர் செமிஹ் லுட்புடகுத், கௌரவ அதிதியாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளர் சட்டத்தரணி எல்.டி.பி. தெஹிதெனிய ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது நடப்பாண்டுக்கான நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

இதில், வை.எம். எம்.ஏ. பேரவையின் 75 ஆவது தேசியத் தலைவராக சட்டத்தரணி அம்ஹர் ஷரீப் தெரிவு செய்யப்பட்டார்.

மாவனல்லை, ஹெம்மாத்தகமையைப் பிறப்பிடமாகக் கொண்ட அம்ஹர் ஷரீப், சப்ரகமுவ மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட வை.எம்.எம்.ஏ. பேரவையின் முதலாவது தேசியத் தலைவராவார் என்பது குறிப்பிடத்தக்கது.

(05)

# கல்கந்தவத்த தமிழ் வித்தியாலய ஆசிரியர்கள், அதிபர் ஆர்ப்பாட்டம்





நுவரெலியா கல்வி வலயத்தின் கல்கந்தவத்த தமிழ் வித்தியாலய ஆசிரியர்களும் அதிபரும் இணைந்து மாணவர் கல்வியைப்பாதுகாப்பதற்கும் அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்ப்பதற்குமானஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

கையில் பதாகைகளை ஏந்திய வண்ணம் கோஷங்களை எழுப்பி அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டு இருந்தனர்.

அதேவேளைகடந்தகாலங்களில் அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு இவ் அரசு இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாத நிலையில் இவர்களின் சம்பள பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கோரி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

அத்துடன் மாணவர்களின் கல்வியைப் பாதுகாக்குமாறு கோரியும் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.(05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# சம்பந்தனின் இறுதிக் கிரியைகளுக்கு தயாராகுகிறது திருகோணமலை மண்!






(ஹஸ்பர் ஏ.எச்)

காலஞ்சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெருந்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அமரர் இரா.சம்பந்தனின் இறுதி கிரியைகள் திருகோணமலையில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெறவுள்ள நிலையில் ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன.

அன்னாருக்காக அஞ்சலி நிகழ்வும் இடம் பெற்று வருகின்றது. இதற்காக திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கம் உட்பட இலங்கை தமிழ் அரசு கட்சியின் மாவட்ட கிளை கதிரவேலு சண்முகம் குகதாசன் தலைமையில் இதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.



# சம்பந்தனுக்கு இலங்கை தமிழ் அரசு கட்சி யாழ்ப்பாண தலைமையகத்தில் அஞ்சலி



இலங்கை தமிழரசு கட்சியின் சிரேஷ்ட தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அமரர் இராஜவரோதயம் சம்பந்தனுக்கு இலங்கை தமிழரசு கட்சி யாழ்ப்பாண தலைமையகத்தில் செவ்வாய்க்கிழமை அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இலங்கை தமிழரசு கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அன்னாரின் உருவபடத்திற்கு ஈகைசுடர் ஏற்றப்பட்டு மலர்மாலை அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து சிரேஷ்ட உறுபினர்களால் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அன்னாரது மறைவை தொடர்ந்து கட்சி கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டதுடன் கறுப்பு கொடி, பனர்கள் கட்டப்பட்டு துயரம் வெளிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நாளை (வெள்ளிக்கிழமை) மாலை கட்சியின் தலைமை அலுவலகத்தில் யாழ்ப்பாண தொகுதி கிளையினரால் விசேட அஞ்சலி நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)



# இரா.சம்பந்தனுக்கு அனுதாபம் தெரிவிக்க அனுமதிகோரி சஜித் சபாநாயகர் தர்க்கம்



மறைந்த இரா. சம்பந்தனுக்கு சபையில் ஜனாதிபதி மட்டுமா அனுதாபம் தெரிவிக்க முடியும். எதிர்க்கட்சித் தலைவருக்கு அந்த சந்தர்ப்பம் இல்லையா என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேதமாஸ சபாநாயகரிடம் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றம் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதனையடுத்து சபாநாயகர் அறிவிப்பு, ஜனாதிபதி உரை என்பன இடம்பெற்றன.

இதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது உரையை நிறைவு செய்த பின்னர் ஞாயிற்றுக்கிழமை காலமான இலங்கை தமிழரசுக் கட்சியின் பெரும் தலைவரான இரா.சம்பந்தனுக்கு அனுதாபம் தெரிவித்து உரையாற்றினார்.

இதனையடுத்து எழுந்த எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ, இரா.சம்பந்தனுக்கு தானும் அனுதாபம் தெரிவித்து உரையாற்ற முற்பட்டபோது அதற்கு சபாநாயகர் அனுமதி வழங்க மறுத்து விட்டார்.

இதன்போதே மறைந்த இரா. சம்பந்தனுக்கு சபையில் ஜனாதிபதி மட்டுமா அனுதாபம் தெரிவிக்க முடியும்? எதிர்க்கட்சித் தலைவரான என்னால் அனுதாபம் தெரிவிக்க முடியாதா? ஜனாதிபதிக்கு ஒரு கவனிப்பு, எமக்கு ஒரு கவனிப்பா என சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பினார் .

அதற்கு சபாநாயகர் பதிலளிக்கையில், இரா.சம்பந்தனுக்கு அனுதாபம் தெரிவித்து பேச முடியாது. அதற்கு ஒரு நாள் ஒதுக்கப்படும் அன்று நீங்கள் பேச முடியும். - என்றார்.

அப்படியானால் இன்று ஏன் ஜனாதிபதிக்கு அனுமதி கொடுத்தீர்கள் எனக் கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தனுக்காக நாம் ஒரு பிரேரணை கொண்டு வந்து உரையாற்றுவோம் என்றார்.

அதனையடுத்து சபாநாயகர், சரி, இறுதியில் உங்களுக்கு வாய்ப்பு தருகிறேன் எனக்கூறிய சபாநாயகர், பிரதான நடவடிக்கைகள் முடிந்த பின்னர் இரா.சம்பந்தனுக்கு அனுதாபம் தெரிவிக்க எதிர்கட்சித்தலைவருக்கு அனுமதி வழங்கினார். (05)

# தமிழ் பேசும் மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத மாபெரும் இழப்பு சம்பந்தன் ஐயாவின் மறைவு

## முஸ்லிம் பேரவை செயலாளர் என்.எம்.அப்துல்லாஹ் அனுதாபம்

சம்பந்தன் ஐயாவின் மறைவு இலங்கை தமிழ் பேசும் மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத மாபெரும் இழப்பு என யாழுப்பாணம் கிளிநொச்சி முஸ்லிம் பேரவை செயலாளர் என்.எம்.அப்துல்லாஹ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கை தமிழ் - முஸ்லிம் உறவின் இணைப்புக்கான அடையாளமும், இலங்கையின் சிரேஸ்ட அரசியல் ஆளுமையுமாகிய இலங்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் மறைவு இலங்கை அரசியல் பரப்பிலும், தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் ஈடுசெய்யப்பட முடியாத வெற்றிடத்தையும், இழப்பையும் ஏற்படுத்தியுள்ளது. அன்னார் காலமான செய்தி யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும், ஆழ்ந்த கவலையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

சம்பந்தன் ஐயாவின் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழ் மக்களின் நிரந்தரத் அரசியல் தீர்வுக்கான அனைத்து மட்டத்திலான நீண்டகால அரசியல் முன்னெடுப்புக்களிலும் இலங்கை முஸ்லிம் மக்களையும் இணைத்து தமிழ்பேசும் மக்களாக ஒன்றிணைத்து முன்னெடுத்திருந்தமையே அவரது தலைமைத்துவம் மற்றும் ஆளுமையை வெளிக்காட்டுகின்றது. கட்சி அரசியலுக்கு அப்பால் அனைத்து மக்களையும் அரவணைத்துச் செல்லும் அவரது பண்பே அரசியலில் அவரை மாபெரும் இடத்திற்கு கொண்டு சென்றது எனலாம்.

அரசியலில் ஜனநாயகம், சமாதானம், ஐக்கியம் உள்ளிட்டவற்றை ஒவ்வொரு தருனங்களிலும் தொடர்ச்சியாக வலியுறுத்தி அதன் அடிப்படையிலேயே செயற்பட்டிருந்தார். நாட்டின் சிங்கள அரசியல் தலைவர்கள் உட்பட சர்வதேச நாடுகளின் தலைவர்கள் சர்வதேச நாடுகளின் இராஜதந்திரிகளும் மற்றும் நாட்டின் அனைத்து இன மக்களும் பெரிதும் மதிக்கும் இலங்கையின் சிரேஸ்ட அரசியல் தலைவராவார். தனது மக்களின் தீர்வுக்காக இறுதிவரை போராடிய பெருந் தலைவரையே இலங்கை தமிழ்பேசும் சமூகம் இன்று இழந்து நிற்கின்றது.

அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் இலங்கை மக்கள், தமிழ்பேசும் மக்கள், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் அன்னாரது குடும்பத்தினர் அனைவரோடும் இணைந்து யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்களாகிய நாமும் துயர் பகிர்கின்றோம் - என்றார்.(05)

# இலங்கையின் சர்வதேசம் மதிக்கத்தக்க தலைவராக இருந்தவர் இரா.சம்பந்தன்

## சமத்துவக் கட்சி இரங்கல்

இனவாதக் கொந்தளிப்பினால் அழிந்து கொண்டிருக்கும் இலங்கையை மீட்டெடுப்பதற்கு சமாதானமும் நீதியான முறையில் பல்லின சமத்துவமும் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திச் செயலாற்றிய மூத்த அரசியல் தலைவர் இரா. சம்பந்தனுடைய மறைவு நாட்டுக்குப் பேரிழப்பாகும்.

இந்த வெற்றிடத்தை நிரப்புவது இன்றைய சூழ்நிலையில் மிகக் கடினமானதாகும். சம்பந்தனுடைய மறைவுநாட்டில் அமைதியையும் நீதியானதீர்வையும்எட்ட விரும்பும்அனைவருக்கும் ஏற்பட்டுள்ளபேரிழப்பாகும். இந்த இழப்பைஆழமாகச் சமத்துவக் கட்சி உணர்ந்து கொண்டு, மறைந்த தலைவர் சம்பந்தன் அவர்களுக்கு தன்னுடைய அஞ்சலியை செலுத்துகிறது என அந்தக் கட்சியின் தலைவர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

சம்பந்தனின் மறைவுக்கு அவர் விடுத்துள்ள இரங்கற் செய்தியில் இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் நீதியான தீர்வொன்றை எட்ட வேண்டும்எனத்தன்னுடையஇறுதிமூச்சுவரையிலும் உறுதியாக இருந்தவர் சம்பந்தன். இதற்காக அவர் தன்னுடைய கட்சிக்குள்ளும் வெளியிலும் கடுமையான எதிர்ப்புகள், விமர்சனங்கள், சர்ச்சைகளை எதிர்கொண்டிருந்தார். எனிலும் சமாதானத்திலும் ஐக்கியத்திலும் அமைதித்தீர்விலும் கொண்டிருந்த ஆர்வத்தைக் குறைத்ததில்லை. இத்தகைய பெறுமானத்தைக் கொண்ட தலைவரின் இழப்பை சமத்துவக் கட்சி ஆழமாக உணர்ந்து கொண்டு, சம்பந்தனுக்கு தன்னுடைய அஞ்சலியை செலுத்துகிறது.

இலங்கைத் தீவில் அமைதியை வலியுறுத்தித் தொடர்ந்து செயற்பட்ட மூத்த அரசியல் தலைவர் இரா. சம்பந்தன். ஒடுக்கப்பட்ட இனமொன்றின் அரசியல் தலைமையை,அதனுடைய நீண்ட விடுதலை அரசியற் போராட்டத்தின், போரின் பின் ஏற்றுச் செயற்படுவது எளிதானதல்ல. அதிலும் போரில் தோற்கடிக்கப்பட்ட தரப்பாகத் தமிழர்கள் இருந்த நிலையில், அதற்குத் தலைமைப்பொறுப்பை வகிக்கும் வரலாற்றுச் சூழல் சம்மந்தன் அவர்களுக்கு அமைந்தது. இது மிகச் சிக்கலான ஒரு நிலையாகும். இந்த நிலையில் தன்னால் முடிந்த அளவுக்கு விட்டுக் கொடுப்புகளைச் செய்து சிங்களத் தரப்பினரோடு கைகோர்த்து அமைதித் தீர்வை எட்டுவதற்கு முயற்சித்தார். ஆனாலும் அவருடைய முயற்சிகள் தோற்கடிக்கப்பட்டன. இதன்மூலம் சம்மந்தனோ அவருடைய வழிமுறையோ ஒருபோதும் தோற்கடிக்கப்படவில்லை. வரலாற்றில் அதற்கான இடம் நிச்சயமாக இருந்தே தீரும். அமைதிக்கு எதிராகச் சிந்திப்போரும் செயற்படுவோருமே வரலாற்றிற் தோற்கடிக்கப்பட்டோராக இருப்பர்.

அறுபது ஆண்டுக்கும் மேலான சம்பந்தனுடைய அரசியற் பயணம் நெருக்கடிகள், சர்ச்சைகள், எதிர்ப்புகளின் மத்தியிலேயே நிகழ்ந்தது. அவருடைய அரசியல் நிலைப்பாட்டுக்காகச் சிங்கள இனவாதிகளினாலும் தீவிரத் தமிழ்த்தேசியவாதிகளாலும் மிக மோசமாக விமர்சிக்கப்பட்டிருக்கிறார். இதொரு விநோதமான நிலையாகும். அமைதியையும் சமாதானத்தையும் விரும்பும்போது இணக்கப்பாட்டையே கடைப்பிடிக்க வேண்டியிருக்கும். இனவாதம் என்பது இணக்கப்பாட்டுக்கு எதிரானது. என்பதால் இரண்டு தீவிரத் தேசியவாதத்துக்கும் (இனவாதத்துக்கு) எதிராக நின்று தாக்குப் பிடிக்க வேண்டிய வரலாற்று நிர்ப்பதத்தை ஏற்க வேண்டிய நிலை சம்மந்தன் அவர்களுக்கு ஏற்பட்டது. அந்த நிர்ப்பந்தத்தை அவர் தன்னுடைய முதிய வயதிலும் ஏற்று நின்றதனாலேயே அவருக்கு ஜனநாயக சக்திகளிடத்திலும் முற்போக்காளரிடத்திலும் மதிப்பும் ஆதரவும் கிடைத்தது. இதுவே அவர் சர்வதேச சமூகத்தின் மதிப்பையும் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கும்காரணமாகஅமைந்திருந்தது. மாறிவரும் சர்வதேச சூழலையும் உள்நாட்டு நிலவரங்களையும்நன்றாகஉணர்ந்தறிந்திருந்தவர் சம்பந்தன். அதன்வழியே தமிழ் மக்களுடைய அரசியலை முன்னெடுக்க முயன்றவர்.

வன்முறைக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிரான தன்னுடையநிலைப்பாட்டிலிருந்து அவர் ஒருபோதும் விலகவோதளரவோ இல்லை. ஐக்கிய இலங்கைக்குள் அனைத்துச் சமூகத்தினருக்கும் சமனிலையான அதிகாரமும் உரிமையும் கிடைக்கக்கூடிய அரசியல் தீர்வு வேண்டும் என்பதில் இறுதிவரை உறுதியாக இருந்தார். இதனால் அவர் இலங்கைத்தீவின் தலைவர்களில் ஒருவராக இனமத பேதங்கடந்து அடையாளம் காணப்பட்டிருந்தார். அவருடைய இந்த வழிமுறைதொடரப்படவேண்டும். அதுவேஅவருக்கு இந்த நாட்டு மக்களும் குறிப்பாகத் தமிழ்ச்சமூகமும் செலுத்தும் மதிப்பார்ந்த மரியாதையாக இருக்கும்.

சம்பந்தன் அவர்களை இழந்து நிற்கும் மக்களுக்கும் அவருடைய சக அரசியல் பயணிகளுக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆறுதல்கள் தெரிவித்துக்கொள்கின்றேன் எனத் தெரிவித்துள்ளார். (05)

# சம்பந்தனின் மறைவுக்கு சித்தார்த்தன் இரங்கல்!



தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான இரா. சம்பந்தனின் மறைவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

அவர் தனது இரங்கல் செய்தியில் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

தமிழ் மக்களின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் மிக நீண்ட காலமாக செயற்பட்டு வந்த சம்பந்தன் அவர்கள், தந்தை செல்வா அவர்கள் முதல் இன்றைய தலைமுறையினர் வரை அனைத்துக் காலங்களிலும் கை கோர்த்துப்பயணித்த ஒருதலைவராகத் திகழ்ந்தவர்.

தேர்தல் அரசியலில் ஈடுபடும் வாய்ப்புகள் பல தடவைகள் தந்தை செல்வாமூலம்கிடைக்கப்பெற்றபோதும் அவற்றைத்தவிர்த்து வந்த அதேநேரம், தமிழ்மக்களால்நடத்தப்பட்ட அறவழிப் போராட்டங்கள் பலவற்றிலும் முன்னின்று போராடியிருந்தார்.

1961 ஆம் ஆண்டில் எனது தந்தையார் உள்ளிட்ட பல தமிழரசுக்கட்சித்தலைவர்களின்பங்குபற்றுதலுடன், தந்தை செல்வா அவர்களின் தலைமையில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்திலேயே சம்பந்தனுடன் இணைந்துசெயற்படும் வாய்ப்பு முதல் முதலாக எனக்குக் கிடைத்தது. எனது தந்தையாருடன் அவருக்கிருந்த பலமான நட்புறவு காரணமாக எனக்கும் அவருக்குமான உறவு அன்றைய நாள் தொட்டு சிறப்பானதாகவே அமைந்திருந்தது.

ஆயுதப் போராட்ட அமைப்புகளாக எமது போராட்டப் பாதை மாறுபட்ட தடத்தில் சென்றபோதும் கூட அவருடனான நட்புறவு என்றும் தொடர்ந்திருந்தது.

1985ஆம்ஆண்டுபூட்டான்தேசத்து திம்பு நகரில் தமிழ் அமைப்புகளுக்கும் சிறீலங்கா அரசிற்கும் இடையே நடைபெற்ற முதலாவது பேச்சின் போது, இராஜதந்திர ரீதியிலான பேச்சுக்களில் வெளிப்படுத்த வேண்டிய ஆளுமை நிறைந்த அணுகுமுறைகள் பற்றி அவரிடம் இருந்து பல்வேறு ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டதை இன்று நினைத்துப் பார்க்கிறேன்.

அத்தகைய அவரது திறமை மற்றும் பண்பு, பின்வந்த காலங்களில், குறிப்பாக யுத்தத்தின் பின்னர் தமிழ்ச் சமூகத்தின் குரலாக, தென்னிலங்கை சமூகம் மற்றும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் அவர் அங்கீகாரம் பெற காரணமாயின.

தான் வரிந்து கொண்ட கொள்கைக்காக, எதிரிகளும் நிராகரிக்க முடியாத வகையில், ஆணித்தரமாக ஆளுமை நிறைந்த வகையில் வாதங்களை முன்வைப்பதற்கு அவர் என்றைக்கும் தயக்கம் காட்டியவரல்லர். சக நாடாளுமன்ற உறுப்பினராக பல தடவைகளில் நான் அதனைக் கண்டுணர்ந்திருக்கிறேன்.

பொது வெளியிலும், ஊடகங்களுடனானசெவ்விகளிலும்கருத்துகளை வெளிப்படுத்தும்போது, நிதானமான அவருடைய சொல்லாடல்கள் மற்றும் கருத்துப் பகிர்வுகள், அரசியல் பரப்பில் இயங்குகின்ற அனைவரும் அறிந்துகொள்ள வேண்டிய முன்னு தாரணமான பண்பாகும்.

எவருடனும்சரி, எக்காலத்திலும்சரி, பேச்சுக்களை முன்னெடுக்கும்போது,பேச்சுக்கள் முடிவுக்கு அல்லது முறிவுக்கு வரும்வரை நம்பிக்கையுடன் பயணிப்பதே தலைமைத்துவத்தின் பண்பாகஇருக்க வேண்டும்எனக்கூறி, அதனை–உறுதியாகக்கடைப்பிடித்ததன் காரணமாக பல்வேறுபட்ட விமர்சனங்களுக்கு முகம் கொடுத்திருந்தார்.

தனது வாழ்வின் இறுதிவரை, தந்தை செல்வா முன்மொழிந்த சமஷ்டித் தீர்வுக் கொள்கையில் பற்றுக்கொண்டு, பிளவுபடாத நாட்டுக்குள் தீர்வைப் பெற முயற்சித்த சம்பந்தன் அவர்களின் மறைவு தமிழினத்திற்கும் தேசிய இனப் பிரச்சினை இந்த நாட்டில் இன்னமும் உண்டு என நம்புகின்ற சிங்கள முஸ்லீம் சமூக சக்திகளுக்கும் கவலையை ஏற்படுத்தும் என்பதை மறுக்க முடியாது.

தமிழ்தேசியக்கூட்டமைப்புக்குள் முரண்பாடுகள் உச்சம் பெற்றுவிட்ட வேளையில், அதன் பிளவை தடுக்க முடியாதா எனும் கவலையுடனும் காணப்பட்ட அவர், கட்சிக்குள் தனக்கிருந்த அதிகாரங்களைக் கொண்டு அவசியமான கருமங்களை ஆற்றி, முன்னமே கூட்டமைப்பின் முரண்பாடுகளை சீர் செய்து பிளவினையைத் தடுக்கத் தவறியிருந்தமை அவரது நீண்ட அரசியல் வாழ்வின் இறுதிக் காலங்களை கறைபடிந்ததாக்கி விட்டமை துயர் தரும் விடயமாகியுள்ளது.

அவரது நீண்டகால வாழ்வின் அடிப்படையான அரசியல் அபிலாசைகள், கனவுகள் மெய்ப்பட வேண்டுமெனில், அதற்கான பயணத்தில், சக தமிழ் அமைப்புகளுடன் இணைந்து பயணிக்க அவர் வழி நடத்திய தமிழரசுக் கட்சி, இன்று தங்களுக்குள் இருக்கும் வேறுபாடுகளைக் களைந்து ஒன்றுபட்டு முன்வருவதே அவருக்கான ஆழமான அஞ்சலியாக இருக்க முடியும்.

அவரதுஇழப்பால்துயருற்றிருக்கும்குடும்பத்தினர், உறவினர்கள், ஆதர வாளர்களுக்கு எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். – என்றுள்ளது. (05)

# சம்பந்தனின் மறைவுக்கு ரெலோ இரங்கல் செய்தி

தமிழ் மக்களால் தமிழ்த் தேசியப் பெருந்தலைவராகப் பார்க்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதுபெரும் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தனின் மறைவுக்கு தமிழ் ஈழ விடுதலை இயக்கம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதுபெரும் தலைவரும் திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தனின் மறைவு தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைத் தீர்வுக்கான பயணத்தில் பாரியதொரு இடைவெளியை ஏற்படுத்தியிருக்கிறது.

தந்தைசெல்வநாயகத்தால்ஆரம்பிக்கப்பட்டதமிழரசுக்கட்சியின் தலைவர்கள் வரிசையில் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் போன்ற மறைந்த அரசியல்வாதிகள் வரிசையில் சம்பந்தனும் இணைந்துகொண்டுள்ளார்.

1977களில் தன்னை நாடாளுமன்ற அரசியலுக்குள் தன்னை நுழைத்துக் கொண்ட சம்பந்தன், 1983 ஜூலைக் கலவரத்துக்கு எதிர்ப்பு வெளியிட்டும், இலங்கை அரசமைப்பின் 6ஆம் திருத்தத்திற்கு ஆதரவளிக்கமுடியாது என்றும் எதிர்ப்பை வெளிக்காட்டியமையால் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்திருந்தார். இருந்தாலும் அதன் பின்னரான 18 வருடகாலங்கள் நாடாளுமன்ற அரசியலுக்கு வெளியில் இருந்திருந்த போதிலும் 2001ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைத் தக்கவைத்திருந்தார். அது தமிழ் மக்களுக்கான அவருடைய அரசியல் பணிக்குக் கிடைத்த வெகுமதியாகும்.

2009இற்குப் பிறகு தமிழ் மக்களின் உரிமைப் பேராட்டத்திற்கு தலைமை தாங்கியது மட்டுமல்ல ஒருமித்த, பிரிக்கப்படாத நாட்டுக்குள் பல விமர்சனங்களுக்கும் பலரது வேறுவிதமான விருப்பங்களுக்கு மத்தியிலும் தமிழ் மக்களது பிரச்சினைக்கு ஒரு சமஷ்டி முறையிலான தீர்வைக் கொண்டுவருவதற்கு முயற்சித்தார். அவ்வேளைகளில் மாறிமாறிவந்த அரசுத் தலைவர்களால் ஏமாற்றப்பட்டவர். அதே நேரத்தில் முஸ்லிம் மக்களையும், அவர்களது பிரச்சினைகளையும் சமாந்தரமாக அணுகுவதிலும் பின்நிற்கவில்லை. அதனால் தமிழ் மக்களிடமும் தமிழ் அரசியல்வாதிகளாலும் விமர்சனங்களுக்கும் உள்ளாகியிருந்தார்.

தன்னுடைய முதுமையையும் பொருட்படுத்தாது தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக தொடர்ச்சியாகப் பாடுபட்டவரான ஆர்.சம்பந்தன், வெளிநாட்டு தூதுவர்கள், உலக நாடுகளின் தலைவர்களாலும் மரியாதையுடன் பார்க்கப்பட்டவராக இருந்தார். சர்வதேச இராஜதந்திர மட்டத்திலும், பெரும்பான்மை அரசியல் தலைவர்களிடமும் தமிழ் மக்களுடைய விடயங்களை எடுத்தியம்பும் வகையில் தன்னுடைய அரசியலை தொடர்ந்து வந்திருந்த அவர் இறுதி நேரத்திலும் தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்வதில் ஜனநாயக வழிமுறையில் முழுமூச்சாக ஈடுபட்டிருந்தார்.

அந்தவகையில்தான் தமிழ் மக்களுக்கு உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி சிங்கள அரசியல்வாதிகளுடனும் கலந்துரையாடியதுடன், 2015ஆம் ஆண்டு அமைந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் எதிர்க்கட்சித்தலைவராக இருந்த வேளையில் அரசமைப்பு மாற்றத்திற்காக பாடுபட்டிருந்தார்.

தமிழ்மக்களின் உரிமைகளுக்காக ஜனநாயக வழிமுறைகளில் இடைவிடாது அரசியல் ரீதியாகச் செயற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனின் மறைவு தமிழ் மக்களின் அரசியல் பயணத்தில் ஒரு பேரிழப்பாகும்.

2001 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைத் தலைமைதாங்கி வழிநடத்திவந்த இரா.சம்பந்தன் கூட்டமைப்பின் பிளவிலும், தனது இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சிக்கல்களிலும் அண்மைக்காலங்களில் மனம்நொந்திருந்தார். அந்தவகையில், தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் ஒன்றுமையும் ஒருமிப்பும் ஒருங்கிணைந்த தமிழ்த் தேசியப் பயணமுமே நாம் அவருக்குச் செய்யும் இறுதிக்கடனாகும்.

ஒரு சிரேஷ்ட அரசியல்வாதியை இழந்து துயருறும் தமிழ் மக்கள், அவருடைய குடும்பத்தார், அவருடைய கட்சியினர், நண்பர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். – என்றுள்ளது.(05)

## உறுமய வேலைதிட்டத்தின்கீழ் பூரண உரித்து வழங்குதல் தொடர்பிலான நடமாடும் சேவை!

(ஹஸ்பர் ஏ.எச்)

உறுமய வேலைத் திட்டத்தின் கீழ் பூரண உரித்து அளிப்பு வழங்குதல்தொடர்பிலானநடமாடும் சேவையொன்றுசெவ்வாய்க்கிழமை தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த நடமாடும் சேவை தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்றதுடன்'உறுமய'திட்டத்தின்கீழ் பூரணஉரித்துஅளிப்புபத்திரங்களை இதன் மூலம் பெறக் கூடிய வாய்ப்பு கிடைக்கப் பெறுகிறது.

மீரா நகர், பொற்கேணி, முள்ளிப்பொத்தானை, சிராஜ்





நகர், முள்ளிப்பொத்தானை வடக்கு, முள்ளிப்பொத்தானை கிழக்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளை சேர்ந்தவர்களுக்காக செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதில் காணி ஆணையாளர் என்.வில்வரத்னம், காணிக் கிளை உத்தியோகத்தர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)















காலைக்கதிர் Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.07.2024இல் வெளியிடப்பெற்றது